கோவாவில் அமெரிக்க தளங்கள்!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா | சென்னை: ஆவணி 2௨ புதன் (18—8—54) | மலர்: 2
இலங்கையில் 10 சதம் | வெளியூர்: ஆவணி 3௨ வியாழன் (19—8—54) | இதழ்: 56

விமான கூடங்கள், கடல் தளங்கள் அமைக்கப்படுகின்றன!

அமெரிக்க தளபதிகளின் மேற்பார்வையில் இராணுவ ஏற்பாடுகள்

மாஸ்கோ, பீகிங் இதழ்களின் குற்றச்சாட்டு!

யுத்த காலத்தில் எதிரி கப்பலுக்கு இடம் கொடுத்த மர்மகோவா!

அந்நிய திட்டுக்கள் பற்றி டாக்டர் இராமசாமி எச்சரிக்கை

போர்ச்சுகீசிய இந்தியா 'கொரியா' ஆகுமா?

போர்ச்சுகீசிய இந்தியப் பகுதிகளை அமெரிக்கா தனது ஆக்கிரமிப்பு நோக்கங்களுக்குப் பயன்படுத்த எண்ணுகிறது என்ற செய்தி வலுப் பெற்று வருகிறது.

கோவா, மற்றும் போர்ச்சுகீசிய இந்திய பகுதிகளில் நடைபெறும் விடுதலை கிளர்ச்சியை அமெரிக்கா ஆரம்ப முதலே கூர்ந்து கவனித்து வருகிறதாம்!

தனது அடக்குமுறைகளுக்குத் தேவையான உதவிகளைப் பெற, போர்ச்சுகல், 'நேட்டோ' மூலம் அமெரிக்காவை அணுகியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்போது அமெரிக்காவின் நோக்கம் பற்றி சோவியத் பத்திரிகையான 'பிராவ்தா'வும், சீனப் பத்திரிகை ஒன்றும் குறிப்பிட்டுள்ளன.

லண்டன் ஆக. 17— சோவியத் கம்யூனிஸ்டு கட்சியின் இதழான 'பிராவ்தா,' "போர்ச்சுகீசிய பகுதிகளை தனது தளங்களாகப் பயன்படுத்த அமெரிக்கா முயற்சிக்கிறது," என்று குற்றம் சாட்டியுள்ளது.

"தன்னுடைய ஆக்கிரமிப்பு எண்ணங்களுக்கு, கப்பல், விமானத் தளங்கள் போன்று போர்ச்சுகீசிய இந்தியப் பகுதிகள் காட்சியளிப்பதால், அமெரிக்கா அவைகள்மீது தனி அக்கரை காட்டுகிறது; அந்த அக்கரை நாள்தோறும் அதிகமாகிக் கொண்டே வருகிறது" என்று 'பிராவ்தா' இதழ் மேலும் கூறுகிறது.

அமெரிக்க தளபதிகளின் மேற்பார்வையில் போர்ச்சுகீசிய இந்தியப் பகுதிகளில் இராணுவ ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்று வெளிகாட்டு செய்தி நிலையங்கள் கூறுவதையும் 'பிராவ்தா' எடுத்துக்காட்டியுள்ளது.

★

சீன சர்க்கார் தினசரி இதழ் ஒன்று, "கோவா, அதிவேகமாக அமெரிக்காவின் போர்த் தளமாக மாற்றப்பட்டு, இந்தியாவைப் பயமுறுத்துவதுடன் ஆசியாவில், சமாதானத்திற்கும் பங்கம் விளைவிக்கப்படுகிறது" என்று எழுதியுள்ளதாக பீகிங்கிலிருந்து ஒலிபரப்பப்பட்டதாம்.

இந்திய சர்க்காரும், கோவா சுதந்திரவாதிகளும் செய்த நியாயமான கோரிக்கைகளைக் கூட போர்ச்சுகீசிய அதிகாரிகள் ஏற்கவில்லை என்றும், அப்பத்திரிகையில் கூறப்பட்டது.

★

கல்கத்தா ரேடியோவில் பேசிய டாக்டர் ஏ. இராமசாமி முதலியார், அந்நியப் பகுதிகளில் எதிரிக் கப்பல்கள் வருவதால் எவ்வளவு தொல்லைகள் ஏற்படுமென்பதைத்தான் உணர்ந்து கொண்டதாகவும், வைசிராய் கவுன்சிலில் உறுப்பினராக இருந்தபோது, தனக்கு இது பற்றி நல்ல அனுபவம் உண்டு என்றும் கூறினார்.

(4-ம் பக்கம் பார்க்க)

பார்மோசா தீவு பாதுகாக்கப்படும்!

'விடுதலை' செய்ய சீனாவை அனுமதியோம்!

அமெரிக்க கப்பல் படையைக் காட்டுகிறார் ஐசனோவர்!

வாஷிங்டன், ஆக. 17— "சீன தேசியவாதி'களின் பிடியில் உள்ள பார்மோசா மீது படையெடுப்பவர்கள், அங்குள்ள அமெரிக்காவின் ஏழாவது கடற்படையின் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியிருக்கும்,"

—என்று அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவர் கூறினார்.

"சென்ற ஆண்டு துவக்கத்தில், பார்மோசாவை கம்யூனிஸ்டு சீனாவின் படையெடுப்பிலிருந்து பாதுகாக்க வேண்டுமென அமெரிக்க ஏழாவது கப்பற் படைக்கு நான் விடுத்திருந்த உத்திரவுகள் இன்னும் அமுலில்தான் இருக்கின்றன,"

என்றும் ஐசனோவர் குறிப்பிட்டார்.

அண்மையில், பார்மோசா 'விடுதலை' குறித்து கம்யூனிஸ்டுகள் வற்புறுத்தி வருகிறார்கள் என்பதும், அதை யொட்டி இராணுவ பலத்தை அவர்கள் அதிகரித்துக் கொண்டு வருகிறார்கள் என்பதும் ஐசனோவருக்குத் தெரியுமா என்றும், அப்படி, கம்யூனிஸ்டு சீனா பார்மோசாவின மீது தாக்குதலை நடத்தினால் என்ன நடக்கும் என்றும் ஐசனோவர் கேட்கப்பட்டபோது. பதிலளிக்கும் வகையில் அவர் குறிப்பிட்டதாவது:—

"1952 ஜனவரியில் நான் பதவியேற்ற பிறகு, பார்மோசா தீவை பாதுகாக்கும் வேலையை அமெரிக்க ஏழாவது கப்பற்படை கவனிக்கும் என்ற 1950-லிருந்தே அமுலிலிருந்து வருகிற உத்திரவு, என்னாலும் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு நடைமுறையிலிருந்து வருகிறது," என்றார்.

"கம்யூனிஸ்டு சீனா பார்மோசாவைத் தாக்கும்போது, அமெரிக்கா, ஏழாவது கப்பற்படையல்லாத வேறு படைகளையும் அனுப்புமா?" என்று கேட்டதற்கு, ஐசனோவர், "இன்னும் இந்தப் பிரச்னை எழவில்லை," என்று கூறினார்.

திரு-தமிழர் தலைவர்கள் டில்லிக்குத் தூது

சென்னைக்கு ஒரு குழு வருகிறது

துப்பாக்கிப்பிரயோக விசாரணை ஆரம்பம்!

சர்க்காரின் போக்குக்குக் கண்டனம்

நாகர்கோவில், ஆக. 17— திரு—கொச்சி தமிழ்ப் பகுதிகளின் நிலைமையைப் பற்றி பண்டித நேருவிடம் எடுத்துக்கூற தி. த. நா. கா. தலைவர் பி. ராமசாமி பிள்ளையும், பாராளுமன்ற உறுப்பினர் நேசமணியும் டில்லிக்குச் சென்றிருக்கின்றனர்.

ஆகஸ்டு 11-ம் தேதியன்று நடைபெற்ற 'விடுதலை தினத்'திற்குப் பின் இப்பகுதிகளில் உள்ள நிலைமையை நேருவிடம் எடுத்துச் சொல்லவே திரு—கொச்சி சட்டசபை உறுப்பினரான ராமசாமி பிள்ளை டில்லிக்குச் செல்கிறார்.

(4-ம் பக்கம் பார்க்க)

மக்களாட்சிப் பண்பு மண்ணாகிறது!

தனி மனிதனின் உரிமைக்கும் உலை!

அமெரிக்காவில் கம்யூனிஸ்டு கட்சி சட்டவிரோதமாக்கப்படுகிறது!

உறுப்பினராயிருப்பதும் தண்டனைக்குரிய குற்றமாம்!

"கம்யூனிஸ்டு கட்சியை ஒரு அரசியல் கட்சியாக ஏற்றுக் கொள்ளக்கூடாது; அதை ஒரு சதிக் கூட்டம் என்றே கருத வேண்டும்," என்று அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவர் அறிவித்துள்ளார்.

"இதன்படி அமெரிக்கத் தேர்தல்களில் பங்கு கொள்ள கம்யூனிஸ்டு கட்சிக்கு இடம் கிடையாது," என்றும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்க செனட் சபையும், மக்கள் சபையும், அமெரிக்காவின் கம்யூனிஸ்டு கட்சியை சட்டவிரோதமானதாக ஆக்குவதுடன், கம்யூனிஸ்டு கட்சியில் அங்கத்தினர்களாவதே தண்டனைக்குரிய குற்றமாகும் என்று ஜனாதிபதி ஐசனோவர் கொண்டுவந்த மசோதா ஒன்றை நிறைவேற்றின.

பின்தங்கிய வகுப்பு விசாரணைக் குழு

சென்னை வருகை

சென்னை, ஆக. 16— மத்திய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ள, பின்தங்கிய வகுப்பு விசாரணைக் குழு, காகா கலேல்கர் தலைமையில் சென்னையில் ஆகஸ்டு 19-ம் தேதியன்று காலை 10 மணி சுமாருக்கு தனது விசாரணையைத் தொடங்குமென்று தெரிகிறது.

வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகம்

கர்னூல், ஆக. 17— ஆந்திர உதவி முதன் மந்திரி சஞ்சீவி ரெட்டி, வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகம் அனேகமாக செப்டம்பர் 2-ம் தேதி துவக்கப்படலாம் என்று தெரிவித்தார்.

ருஷ்யா செல்லும் இந்தியத் தூதுக் குழு!

தொழில், விவசாய முன்னேற்றங்களைக் காணும்!

பெங்களூர், ஆக. 17— தொழில், விவசாயத் துறைகளில் ருஷ்யாவும், போலந்தும் அடைந்துள்ள முன்னேற்றங்களைக் கண்டறிந்து வர, அந்த நாடுகளின் அழைப்பின் பேரில் பத்து பேர் கொண்ட தூதுக்குழு ஒன்று இந்தியாவிலிருந்து வரும் செப்டம்பர் முதல் வாரத்தில் புறப்படும் எனத் தெரிகிறது. மைசூர் மாநில கால்நடைத்துறை டைரக்டர் டாக்டர் பி. எம். என். நாயுடு, அந்தக் குழுவின் ஒரு அங்கத்தினர் எனத் தெரிகிறது.

களம் பல கண்ட காளைகளே! காஞ்சிக்குப் புறப்படுவீர்!

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 18—8—54 புதன்

காஞ்சீபுரம் வாரீர்!

★

நாடாள்பவனே நாட்டிய மங்கையரின் நயனமொழியில் சிக்கிக் கிடக்கிறான்: மக்களின் குறைகளைக் கேட்கும் அவன் செவிகளில், இன்ப வல்லிகளின் காதல் கீதம் தான் கேட்ட வண்ணமிருந்தது! அவன் கரங்களில் மதுக் கிண்ணமும், மங்கையும் மாறி மாறித் தழுவிக் கொஞ்சியது!

மன்னனைச் சுற்றி நின்ற படை வீரரோ, வாணி பாடு வதை விடுத்து, மாத்தையர் புகழ் பாடுவதிலும், போர்க் களம் மறந்து, போகக் களம் நாடுவதிலும் ஈடுபட்டனர்! அரண்மனையும், அதைச்சுற்றி நின்ற மாளிகைகளும் 'இன்பம்' தேடும் இரவுகளையே தயாரித்துக் கொண்டிருந்தன!

நாடாள்பவர்களின் நிலையோ இது! நாட்டில் இருந்தவர்கள் நிலையோ இதற்கு நேர் எதிரானது!

வறுமையின் கோரம் பிடி அவர்களை இறுக்கியது! வாழ்க்கையில் இன்னம், ஒரு கவளம் அன்னம் என்ற பரிதாப நிலை!

மாளிகைகளுக்கு இடையே பாதையில் செத்து விழுந்தான் நாட்டுக்குரியவன், சோற்றுக்கு வழியின்றி! ஆனால், நாள் பூராவும் உழைத்தான்—தனியாக மாத்திரமில்லை — குடும்பத்தோடு, கோழி கூவியதும் எழுந்து சென்று, பொழுது சாயும் வரை உடலையே உரித்து வைத்து, அந்த மாளிகை வாசிகளுக்கு உழைத்தான்! இருந்தும், அவனுக்குக் கிடைத்தவை இரண்டு கசையடிகள்தான்!

நாட்டிலே இரண்டு பிரிவான மக்கள் கூட்டம் வளர்ந்து வந்தது!

'நாங்கள் ஆளுகிறோம்' என்று கூறிய மன்னனும், அவனைச் சூழ்ந்து நின்ற பிரபுக்களும் ஒருபக்கம்!

இந்தத் திமிர் பிடித்த கூட்டத்திற்கு அடிமையாய் அல்லும் பகலும் தன் வியர்வையை சிந்திய உழைப்பாளி மற்றோர் பக்கம்!

முன்னவர், விரல் விட்டு எண்ணக்கூடியவர்!

பின்னவர், எண்ணிலடங்காதவர்!

உழைத்தவன் ஏழையானான்; உழைப்பை உறிஞ்சியவன் சிங்கார வாழ்க்கையின் உச்சிக் கேறினான்!

பல நூற்றாண்டுகளாக நடந்து வந்த இந்த அக்கிரமத்தைக் கேட்பாரில்லை! காரணம், ஏழை—அறிவிலும் ஏழையாக இருந்ததால்!

பருவைத் தங்கி, முதுகெலும்பு கூனிப் போனவன், என்றும் அப்படி இருக்கவில்லை! வெள்ளி முளைத்தது! சீமான்களின் கொட்டம் அடங்கும் நாளும் வந்தது!!

மாடமாளிகைகளிலே மதுக் கிண்ணங்கள் உடைபடும் போது, தெருக்கோடியிலே இருந்த கட்டைச் சாவடிகளிலே எழுத்தாணிகள் உடைந்தன!

அரண்மனையிலே அழகு மங்கையர் முக விலாசம் குறித்து கவிதை எழுதப் பட்டபோது, சாவடியிலே சமத்துவ கீதம் பாடப்பட்டது!

'மானே, மயிலே' என்று அங்கே கீதம் பாடப்பட்ட நேரத்திலே, 'மன்னனு, அவனுக்கு அதிகாரமா'? என்ற கேள்வி கேட்கப்பட்டது இங்கே!

'ஆயுள் முழுதும் அலைந்து பட்டோம்,' என்று வாழ்க்கையின் கடைசிக் கட்டத்திலிருந்தோர் கூறியபோது, "நாங்கள் வாழும் போதிலேயும்; அதைத் தடுப்பவன், ஆண்டாண்டு காலமாக ஆட்சி புரிந்தவனாக இருந்தாலும் சரி, ஆண்டவனின் பிரதிநிதியே ஆனாலும் சரி, இல்லை, ஆண்டவனே ஆனாலும் சரி, யாராயிருந்தாலும் ஒழிப்போம்!" என்ற குரலை எழுத்தனர், புத்தியிலே புரட்சி கொண்டு இளைஞர்கள்!

சாவடிகளிலும், சத்திரங்களிலும் எடுக்கப்பட்ட இந்த உறுதிப்பாடுகள், மக்களை ஒன்று சேர்த்தது. வாழ்க்கையின் அடித்தளத்திலே அழுத்தி வைக்கப்பட்டிருந்த ஏழை எழுந்து நின்றான்! தன்னை உறிஞ்சுபவன் யாரென்று உணர்ந்தான்! அடுத்த கணமே எரிமலையானான்!

பலன், பிரெஞ்சுப் புரட்சி!!

மனித வர்க்கத்தின் நல வாழ்வுக்கு, கம்பையே அர்ப்பணித்திருக்கும் நமக்கு, பிரெஞ்சுப் புரட்சி ஒரு கலங்கரை விளக்கம்!

நாட்டிலே வஞ்சகர்கள் புரியும் நாசகாலத் திட்டங்களை உடைத்தெறியப் புறப்பட்டுவிட்ட நமக்கு வாலிபர்களும், ருஷ்யாவும் உணர்ச்சி ஊட்டியதில் ஆச்சரியமில்லை!

சந்து முனையிலும், சாலை யோரங்களிலும் கிளர்ச்சி விதைகளை நாளெல்லாம் தூவி வருகின்றனர், நமதியக்கத் தோழர்கள்!

நம்மை ஆளவந்தார்கள், நம்மீது போட்ட பாணங்கள் ஆயிரமாயிரம்! நமது தாய்க்கு இணையான மொழியை அழிக்கப் பார்த்தனர்; வீறுகொண்டெழுந்தோம், போரிட்டோம்!

அதன் பலன், இரு கண்மணிகளை இழந்தோம்—அவை முத்துக்களையும், நடராசனையும்! ஆனால், கலங்கவில்லை! பிணம், நமக்கு புது உணர்ச்சியைத்தான் கொடுத்தது!

'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை,' என்று, சிறைக்குள் சென்றோம், சிரித்த முகத்தோடு!

மொழிக்கு வந்த ஆபத்து நாட்டுக்கு வந்து, இனத்திற்கு வந்து, என்றுமே பரம்பரை அடிமையாக நாம் ஆகவேண்டிய நிலையை உண்டாக்கும் என்று தெரிந்த பிறகு நாம் வாளாவிருப்பதா?

குலக் கொள்கை கொடுமைத் திட்டத்தை எதிர்த்திட்டோம்! தன் கடமையை ஆற்றியது! வெற்றிக் கொடி உயர்த்தினோம்! அதில் ஏற்பட்ட ஆபத்துக்கள், அடிபட்ட தோழர்கள், அவதிக்காளான தாய்மார்கள், காட்டிலே துரத்தப்பட்ட கன்னியர்கள், விரட்டப்பட்ட அடக்குமுறைகள், கடுஞ்சொற்கள் எழுதி முடியா; ஆனால், இதனால், இந்த வீரமரபு சோர்ந்து விடவில்லை, கடைசிவரை போராடி, அரசாங்க எதிர்ப்புக்களால் இன்னும் உறுதிப்பட்டோடு வெளிவந்தனர்!

நாடாண்ட இனத்தை, நாடோடியாக்கும் மரிதாபத்தை எடுத்துக் கூறினோம்; சுரண்டிப் பிழைப்பவர்களுக்கு இது கண்டு கோபம் வரத்தானே செய்யும்? வந்தது! 'ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு,' என்பதுபோல, தமிழனை இகழ்ந்தார் நம்மை ஆள வந்த ஆரிய ஜோதி! அவருக்கு புத்தி கற்பிக்க, அணிந்து போய் தண்டவாளத்தில் நின்றனர், தன் மானம் இழக்க சம்மதியாத தமிழின நந்தர்!

'வடநாட்டுப் பனியா இந்நாட்டிலே கொள்ளையடிப்பதா,' என்று சிந்தித்தான், நிலைமையைக் கண்டு துக்கப்பட்ட திராவிடன்!

மறு நிமிடமே, 'குண்டுகள் வீசப்பட்டாலும், பட்டாளங்கள் ஏவப்பட்டாலும் அஞ்சேன்,' என்று ஆவேசத்தோடு துள்ளிக் குதித்தான்! கல்லக்குடியிலே போராட்டம் நடத்தினான்!

திராவிடனை ஏமாளி என்று எண்ணி, எதிலும் பிழைக்கத் திட்டமிட்டார் ஆச்சாரியார்! அவருக்குப் பாடம் கற்பிக்க வீறு கொண்டெழுந்தான்!

சென்ற ஆண்டு நடந்த இந்த மூன்று போராட்டங்களிலும் ஆறாயிரம் திராவிடர் சிறைக் கூடங்களை நிரப்பினர்!

திரு—கொச்சி தமிழர் பகுதியிலே நம் மக்கள் உரிமைப் போராட்டம் என்றனர்; நாம் அவருக்கு மேல் சிறைக்குள் அனுப்பி, ஒரு நாள் அடையாள மறியலிலேயே, வைரவேரின் குலைநடுங்கச் செய்துவிட்டது, இந்த இயக்கம்!

நாட்டிலே பணமும், அதிகாரமும் வைத்துக் கொண்டு பகல் வேசாதிகாரம் செய்யும் ஆதிக்கரும், அவர்களை உண்டாக்கி ஆட்டிப்படைக்கும் ஏகாதிபத்தியமும், முதலாளித்துவமும் எவ்வளவோ முயன்றும் கூட முகிலைக் கிழித்து வெளிக் கிளம்பும் நமது இயக்கம் நாளுக்கு நாளும் வளர்ந்து வருகிறது!

இன அரசு அமைத்து, நலிந்துபோன மக்களுக்கு நல்வாழ்வு தேடித்தர கங்கணம் பூண்டு புறப்பட்டிருக்கும் இந்த தி. மு. கழகம், இன்று பெரும் மக்கட் சக்தியாக மாறிக் கொண்டிருக்கிறது!

இதனுடைய வளர்ச்சியைக் கண்டு கிலி கொண்டோர், இதை எதிர்த்து ஒழிக்கத் திட்டம் போட்டு வேலை செய்கின்றனர்!

எதிர்த்துப் போரிட்டும், அலட்சியப்படுத்தியும், கேலி பேசியும், கிண்டல் மொழி பகன்றும், எப்படியாவது இதை ஒழிக்கப் பார்க்கின்றனர்!

மதமற்ற மனிதர்கள் போல, 'ஜாதியக் கட்சி' என்று கூறி, நம்மை அடக்கப் பார்க்கின்றனர், சட்டத்தை அணைக்கு வைத்திருப்பவர்கள்!

அன்போடு அழைத்து, தூங்கிய பிறகு முடிச்சவிக்கலாம் என்று அரசியல் தந்திரம் செய்கின்றனர், சிலர்!

"ஐந்தாறு வாலிபர்கள் கூடும் கழகம்தானே இது," என்பார் ஒரு சமயம்; பிறகு அவர்களே, "எங்கள் தலைவர் இளைஞர்களுக்கெல்லாம், இளைஞர்!" என்று வாய்ஜம்பமடிப்பர்!

'இது ஒரு கட்சியேயில்லை," என்று பறை சாற்றுவர் சில சமயம்; சில நேரங்களில், 'நமது கட்சியும் ஒத்துழைக்க வேண்டும்,' என்று கெஞ்சுவர். அவர்கள் செய்யும் அர்த்தமற்ற காரியங்களுக்குத் தேவை கொடுக்காவிட்டால், தூற்றுவர்!

'நானும் பூ வைத்திருக்கிறேன்!' என்று அலி கூறுவது போல, அர்த்தமற்ற போட்டியும், பொறாமையும் தாங்காமல் சில நேரங்களில் சத்துமுனை சிந்துவும் பாடுவர்!

இவைகளைப் பற்றி கவலைப்பட நமக்கு நேரமில்லை. நாம் எடுத்துக் கொண்டிருக்கும் பிரச்னையோ மிகப் பெரிது. வாழ்ந்த இனத்தை வாழ்விக்க வைக்கும் பெரும் பணியில் ஈடுபட்டிருக்கும் நமக்கு எண்ணற்ற வேலைகள் இருக்கின்றன. ஆயுட் காலம் பூராவும் உழைத்தாலும் போதாது என்ற அளவில் பணிகள் உள்ளன!

நாட்டிலே அன்றாடம் நடக்கும் சம்பவங்களிலிருந்து, சர்வ தேசியப் பிரச்னை வரை, எல்லா விஷயங்களுக்கும் நம் கருத்தை அறிந்து ஒன்றுபட மக்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர்!

நாட்டில், பெரும் அளவு மக்களுக்கு, 'நாமும் சுதந்திர மனிதர்களாவோம்,' என்ற உணர்ச்சியை உண்டுபண்ணியிருக்கும் நாம், அவர்களுடைய வருங்காலத்தை நிர்ணயிக்கும் பொறுப்பாளிகளாயிருக்கிறோம்.

ஆகவேதான், நாட்டிலே இன்றிருக்கும் ஒவ்வோர் பிரச்னைகளுக்கும் அதைத் தீர்க்கும் வழிகளை விளக்கி வருகிறோம்.

வேலையில்லாத் திண்டாட்டம், தீர வழி என்ன? பிரஞ்சிந்திய விடுதலைப் போரில நமது பங்கு எவ்வளவு? கோவாவில் ஆர்ப்பரிக்கும் டச்சு ஏகாதிபத்தியத்திற்கு நமது பதில் என்ன? திருவிதாங்கூர் தமிழர் போராட்டம் மேற்கொண்டு எப்படி நடத்துவது? — என்ற உடனடி பிரச்னைகளோடு, இனவழி அரசு அமைக்கவும், பிராமணீய ஒழிப்புக்கு மேற்கொண்டு என்னென்ன செய்ய வேண்டுமென்பதையும் விளக்கி வருகிறோம்.

நாடு சுற்றி, பல்வேறு மாவட்டத்து மக்களையும் சந்தித்து, இந்தப் பிரச்னைகளை விவாதித்து, அயராது உழைத்துவரும் நமது இயக்கத் தோழர்கள், இந்த வார இறுதியில், சனி, ஞாயிறுகளில், காஞ்சியில் கூடுகிறார்கள். செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக இரண்டாவது மாநாடு நடைபெறப் போகிறது.

தோழர்களே, அங்கு வாருங்கள்! கூடிப் பேசலாம்! நாடு நகரம் சுற்றிவந்த நமது தோழர்கள் கூறும் அறிவுரைகளைக் கேட்கலாம்! நாட்டுக் கோட்டங்களில், நமதியக்கப் பிரசாரம் செய்து வெற்றிக் கொடி நாட்டிவரும் நமதியக்கச் சொற்செல்வர்களின் தெவிட்டாத கருத்துரைகளை அள்ளிப் பருகலாம்!

பல்லவ சாம்ராஜ்யத்தின் தலைநகரை, திராவிட ராஜ்யத்தின் தலைநகராகு மளவு, மாநாட்டு வேலைகள் செய்து வருகின்றனர், செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகத் தோழர்கள்!

இரண்டு நாட்கள் மாநாடுகள்—முதல் நாள் சமுதாய சீர்திருத்த மாநாடு; மறுநாள் அரசியல் மாநாடு.

திராவிடர்களின் அரசியல் மேதைகளின் அரிய சொற்பொழிவுகளையும், நடிகரத்தினங்களின் கலை விருந்தையும் இழந்துவிடாதீர்கள்!

பல்லவன் பவனிவரப்பாடி வந்த காஞ்சிக்கு வந்து சேருங்கள்! வெற்றிக்கு நாள் குறித்துச் செல்லுங்கள்!!

மறுபடியும் அழைக்கிறோம்—வாருங்கள், வாருங்கள் என்று!

திரு-கொச்சி சர்க்கார் கவனத்திற்கு!

☆

"நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக அலுவலகத்தை, திரு—கொச்சி போலீசார் சோதனை போட்டனர்," என்று செய்தி கிடைத்திருக்கிறது.

கம்யூனிஸ்டு, திரு-கொச்சி தமிழர் காங்கிரஸ் முதலிய கட்சிகளின் நாகர்கோவில் அலுவலகங்களும் போலீஸ் சோதனைக்கு ஆளாயினவாம்!

சென்ற ஆகஸ்டு 11-ந்தேதி நடத்தப்பட்ட 'விடுதலை தினத்'தில் ஏற்பட்ட கலாத்தாக் செயல்களின் காரணமாகத்தான், இந்தப் போலீஸ் சோதனை நடைபெற்றிருக்கிறது என்று தெரிகிறது.

திரு—கொச்சி தமிழர் போராட்டத்திலே தி. மு. கழகத்தின் பங்கையும், பணியையும் நாடு மறந்துவிடாதல்ல!

கடந்த 6-ந் தேதியன்று அந்த அறப்போரிலே கலந்து கொண்டு ஒரு நாள் அடையாள மறியல் நடத்தினர், தி. மு. க. தோழர்கள்; 100-க்கு மேற்பட்ட கழகத் தோழர்கள் அன்று கைது செய்யப்பட்டனர்.

திரு — கொச்சியில் உரிமைப் போர் நடத்தும் தமிழர்களது கோரிக்கை நேர்மையானது என்பதை எடுத்துக் காட்டவும், தமிழர்களின் வாழ்வுக்காக நடைபெறும் அறப்போரில் நமது கழகம் பங்கு பெறவும்தான் கடந்த 6-ந் தேதியன்று அடையாள மறியல் நடைபெற்றது.

என்றுமே கண்ணியம், கட்டுப்பாடு இவைகளைக் கெடையாக்கிக் கொண்டு பணியாற்றி வரும் தி. மு. கழகம், அன்று அடையாள மறியல் செய்த போதும், மிகவும் அமைதியான முறையில் நடந்து கொண்டிருக்கிறது. அடையாள மறியலில் கலந்து கொண்ட கழகத் தோழர்கள் கண்ணியமான முறையில், கடமை தவறாது, உயர் பண்புடன் நடந்துகொண்டார்கள் என்பது பாராட்டத்தகுரியது.

அடையாளமறியலில், நமது

(அடுத்த பக்கம் பார்க்க)

(முன் பக்கத் தொடர்ச்சி)

கழகத் தோழர்கள் கண்ணியமாக நடந்துகொண்டனர் என்பதை திரு-கொச்சி சர்க்காரும் உணர்ந்து கொண்டிருக்கின்றனர் என்பதற்கு, அன்று அவர்கள் விடுத்த அறிக்கையே சான்றாகும்.

அமைதியான மறியல் நடைபெற்ற ஐந்து தினங்களுக்குப் பின்னர், திரு—தமிழர்கள், திரு-த. நா. காங்கிரசின் வேண்டுகோளின்படி 'விடுதலை தினம்' கொண்டாடினார்கள். 'தாயகத்துடன் சேர உரிமை வேண்டும்,' என்ற தங்கள் இலட்சியத்தை வற்புறுத்த நடைபெற்ற 'விடுதலை தினத்'தன்று, திரு—கொச்சி தமிழர் பகுதிகளில் சில அருவெறுக்கத்தக்க சம்பவங்கள், பலாத்கார நிகழ்ச்சிகள் நடைபெற்றன என்று தெரிகிறது.

ஜனநாயகத்தில் நம்பிக்கையும், நீதியில் நாட்டமும் கொண்ட எவரும், தங்கள் உரிமையை நிலைநாட்ட பலாத்கார செயல்களில் ஈடுபடுவது கூடாது; அது நேர்மையற்ற செயலாகும்.

தி. மு. கழகம் பலாத்காரத்தை என்றுமே விரும்பியது கிடையாது; தி. மு. கழகத் தோழர்களில் யாரும் பலாத்காரச் செயலில் ஈடுபட மாட்டார்கள்; அவர்கள் நல்ல பண்புகளுடன், அமைதியான முறையில் நடந்துகொள்பவர்கள்.

திரு—கொச்சியில் அன்று நடைபெற்றிருக்கும் பலாத்காரச் செயல்கள் கண்டிக்கப்பட வேண்டியனவாகும். திரு-தமிழர்களின் முன்னேற்றத்தைக் கருதும் எவரும், இத்தமாதிரி ரௌடித்தனங்களில் ஈடுபட்டிருக்க முடியாது.

திரு-தமிழர் அறப்போரில், ஒரே ஒரு நாள், தி. மு. கழகத்தினர் அமைதியான முறையில் அமைதியான மறியல் செய்வர் என்றும், அறப்போரில் நமது பங்கிற்கான அடுத்த கட்டம் என்ன என்பதுபற்றி தோழர் நேசமணி விடுதலை அடைந்த பின்னர் அவருடன் தி. மு. கழகத்தினர் கூடிப் பேசி முடிவு செய்வார்கள் என்றும் நாகர்கோவிலில் பேசிய நமது பொதுச் செயலாளர் எடுத்துக் கூறினார். நமது கழகம் அமைதியிலே கொண்டுள்ள நம்பிக்கையையும், பலாத்காரச் செயல்களின் மீது கொண்டிருக்கும் வெறுப்பையும் அதே கூட்டத்தில் அவர் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

ஆனால், திரு—கொச்சி சர்க்கார், 'விடுதலை தினத்'தன்று நடைபெற்ற பலாத்காரச் செயல்களுக்கு யார் காரணம் என்பதைக் காண முயலும் போது, எல்லாக் கட்சியினர் மீதும் தங்கள் கண்ணோட்டத்தைச் செலுத்துகின்றனர்.

திரு—தமிழர் அறப்போரில் அமைதியான மறியல் செய்த தி. மு. கழகம், தனது அடுத்த கட்டம் என்னவென்பது பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை; தோழர் நேசமணியுடன் நமது தோழர்கள் கூடிப் பேசி முடிவேதும் செய்யவில்லை; இப்போது நமது நிலை இது தான்!

இந்நிலையில், திரு-கொச்சி சர்க்கார், நாகர்கோவிலில் உள்ள நமது கழக அலுவலகத்தை சோதனையிட்டதின் காரணம் தெரியவில்லை.

சோதனையிட்டவர்கள், தி. மு. கழகத்திற்கும், அங்கு நடைபெற்ற பலாத்காரத்திற்கும் அணுவும் சம்பந்தம் கிடையாது என்பதை நன்றாக உணர்ந்து கொண்டிருப்பார்கள்.

பலாத்காரச் செயல்களில் ஈடுபடுவது, தந்திக் கம்பிகளை அறுப்பது, தண்டவாளங்களைப் பிடுங்குவது, அதிகாரிகள் முகத்தில் திராவகம் வீசுவது போன்றவைகள், நமது செயல்கள் அல்ல; என்றைக்கும் தி. மு. கழகம், அமைதியான அறப்போரில் நம்பிக்கை கொண்டது என்பதை திரு—கொச்சி சர்க்கார் உணர வேண்டும்.

'விடுதலை தினத்'தன்று நடைபெற்ற பொறுப்பற்ற செயல்களில் தி. மு. கழகத் தோழர்கள் எவ்விதத்திலும் சம்பந்தப்பட்டவர்கள் அல்ல; அவர்கள், தங்கள் அரசியல் வாழ்வில் பொறுப்புடன், நேர்மையுடன் இருப்பவர்கள் என்பதையும் திரு—கொச்சி சர்க்கார் உணர வேண்டும்.

ஜாப். பிரதமர் ராஜிநாமா!

சோஷலிஸ்டுகள் கோரிக்கை!

ஜப்பான் பிரதமர், 76 வயதான ஷிகெரு யோஷிடா, தனது பதவியை ராஜிநாமா செய்ய வேண்டுமென, ஜப்பானின் வலதுசாரி, இடதுசாரி ஆகிய இருவகை சோஷியலிஸ்டுகளும் எழுதிக் கேட்டிருந்ததை, ராஜிநாமா செய்ய முடியாதென்று கூறி நிராகரித்துவிட்டாராம்.

சோஷியலிஸ்டுகளின் இந்தக் கோரிக்கைக்குக் காரணம், சென்ற வாரத்தில் தனது லிபரல் கட்சிக் கூட்டத்தில் பேசுகையில் பிரதமர், மந்திரிப் பதவி தேடி அலைபவர்களும், சில பத்திரிகைகளும் வெறும் வதந்திகளை மட்டும் நம்பிக்கொண்டு தனது மந்திரிசபையில் உள்ள முக்கியமானவர்கள் மீது லஞ்சக் குற்றம் சுமத்தி உள்ளதை வன்மையாகக் கண்டித்தாராம்.

இந்தக் கண்டனத்தை எதிர்த்தே சோஷியலிஸ்டுகள் பிரதமரை ராஜிநாமாச் செய்யக் கோரினாராம். அவர் மறுத்துவிடவே, சோஷியலிஸ்டுகள், 'பிரதம மந்திரி யோஷிடா மக்களுடையவும், மக்கள் சபையினுடையவும் விரோதி என்பது இப்போது தெளிவாகிவிட்டன'' என்று ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

சுதந்திர விழாவும் சுகாதார நிலையும்

தொழிலாளர்கள் வாழும் பகுதிகள் அநாகரீகமாயிருப்பதேன்?

இழி நிலை போக்க எல்லோரும் வாரீர்!

மக்களின் சுபிட்சமே சுதந்திரத்தின் இலட்சியம்!

திருமண விழாவில் பொதுச்செயலாளர்

"சுதந்திர விழாக்கள் கொண்டாடும் சிங்காரச் சென்னையிலே உழைப்பாளிகள், பாட்டாளிகள், தொழிலாளர்கள் வசிக்கும் இப்பகுதிகள், குடிசைகளாகவும், சுகாதார வசதியற்று அநாகரிகமாகவும் இருப்பதற்கு வெட்கப்பட வேண்டியதாக இருக்கிறது. ஐந்தாண்டுக்குள் இந்த இழிநிலைமை போக்கப்பட வேண்டும். மக்கள் வாழ்ந்திடும் இடம், வீடுகள், பாதுகாப்புள்ள கெட்டி ஓடு போட்ட கட்டிடங்களாக்கிக் கொடுக்க வேண்டுவது அவசியம். இதை ஆட்சியிலுள்ளவர்கள் செய்ய முன்வர வேண்டும். எல்லா கட்சித் தோழர்களும் இம்முயற்சியில் ஒத்துழைக்க வேண்டும். நாங்களும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கின்றோம்.''

"சாதி-பேதங்களும், ஏழை-பணக்காரர், ஆண்டான்-அடிமை என்ற நிலைமைகள் மாறி, எல்லோரும் சக்திக்கேற்றபடி உழைத்து, தேவைக்கேற்ற வசதிகளைப் பெறும்படி செய்தால்தான், சுதந்திர விழாக்கள் கொண்டாடுவதிலும் பொருள் உண்டு; இதை தேசீயத் தோழர்கள் மனதில் கொள்ள வேண்டுகிறேன்.''

—என்று, பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள், சென்னை, சூளை, மில் தொழிலாளர் பகுதியில் நடைபெற்ற திருமண விழாவில், பாராட்டுரை வழங்குகையில் குறிப்பிட்டார்.

வரவேற்பு

பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள், சென்னை, சூளை, கலியாண மேஸ்திரி தோட்டம் நம்பர் 23, நடுத்தெருவிலுள்ள இல்லத்தில் நடைபெற்ற தோழர் மு. கிருட்டினன் — தோழியர் அமிர்தம் திருமணத் திருவிழாவுக்கு 16—8—54 காலை 9-30 மணிக்கு காரில் வந்து சேர்ந்தார்.

தி. மு. கழகத் தோழர்களும், தொழிலாளத் தோழர்களும் அண்ணாவை ஊர்வலமாகஅழைத்துச் சென்று, ஒவ்வொரு வீட்டிலும் — மலர் மாலைகள் சூட்டி வாழ்த்தொலி முழக்கினர். ஆண்களும், பெண்களுமாக பல்லாயிரக் கணக்கானவர் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். ஊர்வலம் திருமணப் பந்தலுக்குச் சென்று முடிவடைந்தது.

திருமணம்

காலை 10 மணிக்கு திருமண நிகழ்ச்சி ஆரம்பமாயிற்று. தோழர் அ. பொன்னம்பலனார் தலைமை வகித்து முன்னுரை கூறினார்.

மணமக்கள் வாழ்க்கை ஒப்பந்தத்தைக் கூறி, மலர்மாலைகள் சூடிக்கொண்டனர்; மணமகன் தாலியும் கட்டினார்.

தோழர்கள்: என். வி. நடராசன், சென்னை நகரசபை உறுப்பினர் எ. கே. சாமி ஆகியவர்கள் மணமக்களைப் பாராட்டி வாழ்த்துரை கூறினார்கள்.

பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் பேசியதாவது:-

இத்திருமணத் திற்குப் பல மாதங்களாக வரும்படி கேட்டுக் கொண்டிருந்த தோழர்கள், இன்று, என் முன்னிலையில் இத்திருமணம் நிகழ்வதைக் கண்டு மகிழ்ச்சியுறுகின்றனர்; இத்திருமணங்களின் மூலம் பெண்கட்கு சொத்துரிமை, சமத்துவம் ஏற்படுகிறது.

திருமண வாழ்க்கைக்குப் பிறகு ஒற்றுமையாக வாழமுடியாத நிலைமை ஏற்பட்டாலும், கொடுமைப்படுத்தப்பட்டாலும்; திருமணத்திலிருந்து விலகிக் கொள்ளும் (ரத்து) உரிமையும், அரசியலார் சட்டமாக்கி இருக்கிறார்கள்.''

பின்னர் அவர், திருமணத்தில் அர்த்தமற்ற சடங்குகளும், ஆடம்பரங்களும் தேவையில்லை என்பதையும், நம் நாட்டில் சமுகத்திலேற்பட்டிருக்கும் மூடநம்பிக்கைகள் ஒழிந்தாக வேண்டுமென்றும் விரிவுரையாற்றி, இறுதியில் மணமக்களைப் பாராட்டி வாழ்த்துரை கூறினார். தலைவர் முடிவுரையுடன் நன்றி கூற, திருமணம் இனிது முடிவுற்றது.

மணமக்கள் சார்பில் "நம் நாடு'' வளர்ச்சிக்கு ரு 10/ அன்பளிக்கப்பட்டது — பெற்றுக் கொண்டோம் —பொறுப்பாளர்.

* * *

பெயர் சூட்டல்

இத்திருமண முடிவில் தி. மு. கழகத் தோழர் ஒருவருடைய ஆண் குழந்தைக்குப் பொதுச் செயலாளர் "பாண்டியன்'' என்று பெயர் சூட்டினார். இதன் நினைவாக "நம் நாடு'' வளர்ச்சிக்கு ரு 1 அன்பளிக்கப்பட்டது — பெற்றுக்கொண்டோம் — நன்றியுடையது — பொறுப்பாளர்.

★

ஏழுமலை—எழில்மதி திருமணம்

சென்னை, மங்களபுரி கிருஷ்ணதாஸ் ரோடு, 3-வது தெரு, 16-வது நம்பர் இல்லத்தில் 15-8-54 மாலை 5 மணிக்கு தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில், தோழர் நா. ஏழுமலை—தோழியர் ச. கு. எழில்மதி வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது.

தலைவர் முன்னுரை கூறியதும், மணமகன் தோழர் நா. ஏழுமலை வாழ்க்கை ஒப்பந்தத்தைப் படித்து, கையொப்பமிட்டு, மணமகள் மாலை சூட்டினார்.

மணமகள் தோழியர் ச. கு. எழில்மதி அவர்களும் கையொப்பமிட்டு மலர்மாலை சூட்டினார்;

சென்னை நகரசபை உறுப்பினர்களான தோழர்கள் எ. கே. சாமி, கே. இராமலிங்கம் ஆகியவர்கள் மணமக்களைப் பாராட்டி வாழ்த்துரை வழங்கினர்; ஆடி மாதத்தில், நல்ல ராகு காலத்தில் நடைபெறும் இத்திருமணம் சமுகத்திலுள்ள மூடநம்பிக்கையைப் போக்கும் புரட்சிகரமானது என்றும் குறிப்பிட்டுப் பேசினர்.

மணமகன் தோழர் நா. ஏழுமலை எல்லோருக்கும் நன்றி கூறினார்.

மணமக்கட்கு பல தோழர்கள் மலர்மாலைகள் சூட்டி, வாழ்த்து மடல்கள் படித்துக் கொடுத்தனர்.

தலைவர் முடிவுரை கூறி, மணமக்களை ஒற்றுமையுடனும், அன்பும் அறிவும் ஒருங்கே அமைந்த இல்வாழ்க்கையை இனிது நடத்தி சிறப்பெய்த வேண்டுமென்றும் வாழ்த்து கூறினார்.

மணமக்கள் சார்பில் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரு 5/ அன்பளிப்பு அளிக்கப்பட்டது—பெற்றுக்கொண்டோம் — நன்றியுடையது—பொறுப்பாளர்.

32 வருடங்களாக மறைக்கப்பட்டிருந்த பிரேதம்!

சான்டெல்டக்பிபா (சிசிலி), ஆக. 15—

32 வருடங்களாக மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு ஆறு வயதும் பெண் குழந்தையின் எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

ரோசலியோல்லோ பிட்டோ என்பவர் தனது மரணப் படுக்கையில் தனது சகோதரியிடம் கீழ்க்கண்ட விவரங்களைத் தந்தாராம்:

தான் 1916-ம் ஆண்டில் ஒரு பெண் குழந்தைக்குத் தந்தையானதாகவும், ஆறு வருடங்கள் மட்டும் வாழ்ந்த அந்தக் குழந்தை 1922-ல் இறந்துவிட்டதாகவும் குறிப்பிட்டார். அந்தக் குழந்தை இறந்துபோனதை யாரிடமும் சொல்லாது இரகசியமாக வைத்திருக்க எண்ணி குழந்தையின் இறந்த உடலை ஒரு பெரிய பெட்டியினுள் அடைத்து வைத்துவிட்டாராம். பின் 6 ஆண்டுகள் கழித்து அந்தப் பெட்டியை தனது நண்பர்களுக்குத் தந்து விட்டாராம். அவர்கள் அந்தப் பெட்டியில் புத்தகங்கள் இருப்பதாக எண்ணிக்கொண்டிருந்தனராம்.

தன்னிடம் தன் சோதரன் ரோசலிட்டோ கூறிய விவரங்களை சென்ற ஜூன் மாதத்தில் அவர் இறந்துவிட்டபொழுது, போலீசாரிடம் தெரிவித்தாராம் அந்த சோதரியார்.

போலீசார் ஆறு வார காலச் சோதனைக்குப் பிறகு இறந்த பெண் குழந்தையின் எலும்புக் கூட்டைக் கண்டுபிடித்தனராம். அதை இப்போது வழக்கமான சடங்குகளுடன் புதைக்க சவக்கிடங்கில் வைத்திருக்கிறார்களாம்.

வேலையிழந்த உணவு இலாகா சிப்பந்திகளுக்கு

தபால்-தந்தி இலாகாவில் சலுகை

உணவுத் தானியக் கட்டுப்பாடு, பங்கீடு சம்பந்தப்பட்ட நிலையங்கள் மூடப்பட்டு விட்டதன் காரணமாக வேலை இழந்துள்ள ஊழியர்களெல்லாம் தபால்-தந்தி இலாகாவின் வேலைகளுக்கு மனு செய்து கொள்ள அனுமதிப்பதென்று அந்த இலாகா தீர்மானித்திருக்கிறது.

சேமித்து வைத்த பணத்தை எடுத்துச்செல்ல தொல்லை!

தாயகம் திரும்பும் தமிழர் படும்பாடு!

கொழும்பு, ஆக. 15—

இந்தியாவிற்குத் திரும்ப ஆயத்தம் செய்யும் பலஇந்தியத் தொழிலாளர்கள், தங்களது சேமிப்புகளை எடுத்துச் செல்ல முடியாதபடி, இலங்கை செலாவணிக் கட்டுப்பாடுகளினால் தொல்லையும், தாமதமும் ஏற்படுவதாக இந்திய வர்த்தக சபையிடமும், பிற இந்தியப் பிரதிநிதிகளிடமும் புகார் செய்துள்ளனர்.

வர்த்தக சபைக் காரியதரிசி ஓ பி. ஏ. நாயர் நிருபர்களிடம் பேசுகையில், பல ஆண்டுகளாக பணம் சேமித்து வைத்துள்ள சிப்பந்திகளிடமிருந்தே பெரும்பாலான புகார்கள் வந்துள்ளன என்றார்.

தங்கள் சேமிப்புகளைத் தங்களுடன் எடுத்துச் செல்ல விரும்புவதாகக் கூறி அவர்கள் இலங்கை சர்க்காரிடம் அனுமதி கேட்டபோது அவர்களுக்கு 19 பிரதான கேள்விகளும், 20 உப கேள்விகளும் அடங்கிய ஒரு கேள்வித்தாள் அனுப்பி வைக்கப்பட்டதென்றும், அதற்கும் பதில் அளித்தும்கூட மேற்கொண்டு பல விவரங்கள் தேவை என்று அதிகாரிகள் கேட்கிறார்களாம்!

பிறப்பு

கடலூர் ரெட்டிசாவடி(?) தி. மு. கழக விவசாய உறுப்பினர் தோழர் மு செல்வராசன் துணைவியார் 25—7—54-ல், ஒரு பெண் மகவுக்குத் தாயானார். தாயும், சேயும் நலம். இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரு 1 அன்பளிப்பு அளிக்கப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

“காலனி ஆதிக்கம் ஒழிந்தாலன்றி சமாதானம் நிலவுவது சாத்தியமல்ல!”

இந்தோனேஷியத் தலைவர் சுகர்ணோ கருத்து

ஜகார்தா, ஆக. 17—

இந்தோனேஷியத் தலைவர் சுகர்ணோ, “உலகத்திலிருந்து காலனி ஆதிக்கம் ஒழிக்கப்பட்டு, எல்லா நாடுகளும் பூரண சுதந்திரம் பெறவேண்டும்,” என்று, இந்தோனேஷியாவின் 9-வது சுதந்திர தின விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், குறிப்பிட்டதாவது :-

“சமாதானமில்லாத காலனி ஆதிக்கமா? அல்லது காலனி ஆதிக்கமில்லாத சமாதானமா? இதில் எது வேண்டும் என்பது தான் இன்றைய பிரச்சினை; சமாதானமும் வேண்டும், காலனி ஆதிக்கமும் இருக்கத்தான் வேண்டும் என்று யாரேனும் கூறினால் அது, இயற்கையின் கட்டளைக்கு முரண்பட்டதாகும்” என்றார்.

துருக்கி—பாக் ராணுவ ஒப்பந்தம்

எகிப்து சேராது!

கெய்ரோ, ஆக. 17—

எகிப்திய நாடு எந்த ஒரு ‘கூட்டுத் தற்காப்பு நிறுவனத்திலும்’ சேராது என்றும், குறிப்பாக, ‘முஸ்லிம் கூட்டு நிறுவனங்களில்’ நிச்சயமாகச் சேராது என்றும் நம்பத் தகுந்த சர்க்கார் வட்டாரங்கள் கூறினதாகத் தெரிகிறது.

துருக்கிய—பாகிஸ்தான் இராணுவக் கூட்டு ஒப்பந்தத்தைக் குறிப்பிட்டு, அத்தகைய ஒரு ஒப்பந்தம் எல்லா ஆசியர்களையும், இஸ்லாமியர்களையும், 35 கோடி இந்தியர்களையும் விரோதித்துக் கொள்வதாகும் என்றும் இதை எகிப்து ஒரு பொழுதும் செய்யாது என்றும் அந்தச் செய்திகள் கூறுகின்றன.

டாக்டர் மொசாதிக் மீது வழக்கு!

டெஹ்ரான், ஆக. 17—

ஈரானின் முன்னாள் முதல் மந்திரி டாக்டர் முசாதிக்கின் வலது கரம் போலிருந்து, அவர் மந்திரி சபையில் வெளிநாட்டிலாக்கா மந்திரியாயிருந்த டாக்டர் பதேமி மீது, தேசத் துரோகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அவர் முசாதிக் மந்திரி சபையிலிருக்கும் பொழுது, டூடே கம்யூனிஸ்டு கட்சியுடன் சேர்ந்து, முடி அரசைக் கவிழ்க்க சதி செய்ததாகவும், எனவே, அவருக்கு மரண தண்டனை தர வேண்டுமெனவும் சர்க்கார் தரப்பில் கோரப்பட்டுள்ளது.

அவர் முசாதிக் மந்திரி சபை கலைக்கப்பட்டதும்; தலை மறைவாக இருந்தார். இந்த ஆண்டு துவக்கத்தில் கைது செய்யப்பட்ட அவர் விசேஷ ராணுவ நீதி மன்றத்தின் முன் நிறுத்தப் பட்டிருக்கிறார் எனச் செய்திகள் கூறுகின்றன.

பர்மியப் பிரதமர் செஞ்சீனா செல்வார்

சீனப் பிரதமர் சூ-என்-லாய், பர்மியப் பிரதமர் தகின்-நூவை சீனாவுக்கு வருகை தருமாறு அனுப்பியிருந்த அழைப்பை பர்மியப் பிரதமர் ஏற்றுக்கொண்டதாக பர்மிய மக்கள் சபையில் அரசாங்க அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

செஞ்சீனாவுக்கு பர்மிய ரப்பர்!

அமெரிக்கா தடுத்ததின் பேரில் சீனாவுக்கு அனுப்பவிருந்த பர்மிய ரப்பர் அனுப்பப்படாது நிறுத்தப்பட்டது என்ற செய்தியை பர்மிய அரசாங்க அதிகாரி மறுத்தார்.

கம்யூனிஸ்டு சீனாவுக்கு அனுப்புவதற்கான ரப்பர் விரைவிலேயே அனுப்பப்படும். ரப்பர் சீனாவுக்கு ஏற்றிச் செல்லும் கப்பல் தருவதற்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

கழகக் கூட்டம்

★

சிவலிங்கத் தாங்கி

கட்டபொம்மன் திடலில்

20—8—54 மாலை 5 மணிக்கு

தலைவர் : எம். கே. தாமோதரன்

பேசுவோர் :

மா. மாணிக்கம்

வை. விழிநாதன்

இந்திய தபால் - தந்தி காரியாலயம், 1854-ம் ஆண்டில் மொத்தம் 28,000 தபால் சாமான்களை ஏற்றி அனுப்பி வந்தது. இன்று அந்த இலாகா நாளொன்றுக்கு 36 மொழிகளில் விலாசமிடப்பட்ட, சுமார் 70 இலட்சம் தபால் சாமான்களை கையாண்டு வருகிறது.

திரு—தமிழர் தலைவர்கள்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தமிழ் பகுதியில் நடைபெறும் போலீஸ் அடக்கு முறை பற்றி சென்னை முதல் அமைச்சர் காமராசர், எஸ். என். கரையாளர், இராசகோபாலாச்சாரியார் ஆகியோரிடம் எடுத்துரைத்து, அவர்களுடைய யோசனையைக் கேட்க, தி. த. நா. கா. தலைவர்களான சிதம்பர நாடார், என். ஏ. நூர் முகமது, வி. கே. இராஜா பிள்ளை ஆகியோர் சென்னைக்கும் புறப்பட்டனர்.

சோதனையிட்டனர்!

நாகர்கோவிலில் உள்ள பல வேறு அச்சகங்களிலும், திரு—கொச்சி போலீசார், அண்டு பிரசுரங்கள் அச்சடிக்கப்பட்டதுபற்றி சோதனையிட்டனர் என்று தெரிகிறது.

குழித்துறை ‘லாக்கப்’பில் உள்ள நல்லதம்பி நாடார், குஞ்சன் நாடார், செல்லையா, வில்லியம்ஸ், கோபால கிருஷ்ணன், ஆகியோரின் ஜாமீன் மனு 20-ந் தேதியன்று விசாரணைக்கு வருகிறது.

விசாரணை

தென் திருவாங்கூரில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்த லிஸ்லையன்கோடு முதலிய இடங்களில், ஏற்பட்ட குழப்பம் பற்றி திருவனந்தபுரம் ஜில்லா மாஜிஸ்திரேட் விசாரணையை ஆரம்பித்திருக்கிறார்.

குற்றவாளியே நீதிபதியா?

“தென் திருவாங்கூரில் நடந்த துப்பாக்கிப் பிரயோகம் பற்றி விசாரணை நடத்த, சுடுவதற்குக் காரணமாயிருந்த ஜில்லா மாஜிஸ்திரேட்டையே நியமித்திருப்பது கண்டிக்கத் தக்கது” என்று தி. த. நா. கா. கூட்டுக் காரியதரிசியான டி. ஞானசிகாமணி கண்டித்திருக்கிறார்.

“சாட்சிக் கூண்டில் நிற்க வேண்டிய ஜில்லா மாஜிஸ்திரேட் எவ்வாறு நீதிபதியாக இருக்க முடியும்?” என்று அவர் கேட்கிறார்.

“இப்பிரச்சினையில் நேர்மையாக நடக்க சர்க்கார் விரும்புவார்களானால், சம்பவங்களில் மாஜிஸ்திரேட் தொடர்பு கொண்டிருக்கிறார் என்னும் போது, சர்க்கார் ஒரு உயர் நீதிமன்ற நீதிபதியை நியமித்திருக்க வேண்டும்” என்றார் அவர்.

“நீதி, நேர்மை இவ்வண்டிக

கோவாவில் அமெரிக்க......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவின் எந்த அன்னிய ஆதிக்கத்திற்கும் இடம் தரக் கூடாது என்று கூறிய அவர், இரண்டாவது உலகப் போரின்போது எதிரிக் கம்பெனிகள் பதுங்க, மர்மகோவாவின் இடம் கொடுத்து, தொல்லை தந்ததை எடுத்துக் கூறினர்.

“போர்ச்சுகலின் அந்த கைய கடுகிலைமை நமக்கு வேண்டாம்; இனிமேல் இச்சிறு திட்டுகளை நம்மால் சகித்துக்கொண்டிருக்க முடியாது” என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

★

ஒருவர் மரணம்

தேரகோல் கோட்டையைப் பலாத்கார முறையில் போர்ச்சுகீசியத் துருப்புகள் பிடித்த போது கோவா அறப்போர் வீரர்களில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று தெரிகிறது.

★

நேரு பதில்

இந்தியப் பிரஜைகள் போர்ச்சுகீசியப் பிரதேசங்களில் நுழைவது முறையாகாதென்றும், அதனால் இந்தியாவிற்கு நன்மை எதும் கிடையாதென்றும் 1,200 தொண்டர்களோடு, டாமனில் நுழைய, சாலையில் உட்கார்ந்திருந்த சுவர்லால் தேசாய்க்கு நேரு தந்தி மூலம் பதில் அளித்திருக்கிறார்.

★

பார்வையாளர்கள்

சர்வதேசப் பார்வையாளரைக் கொண்டு, போர்ச்சுகீசியப் பகுதிகள் நிலைமையைப் பார்வையிடும்

ளுடன் பி.—சோ. சர்க்கார் நடந்துகொள்ள விரும்பினால், அவர்கள் உடனே பதவியை ராஜிநாமா செய்துவிட்டு, ஒரு பொது விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்” என்று அவர் மேலும் கூறினர்.

பிரச்சினைக்கு இந்திய சர்க்காரின் யோசனையை போர்ச்சுகல் சர்க்கார் ஒப்புக் கொண்டிருக்கிறது. இதுபற்றி இருநாடுகளின் பிரதிநிதிகளுக்குமிடையே புதுடில்லியில் விரைவில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் என்று தெரிகிறது.

★

போர்ச்சுக்கல் - பச்சைப்பொய்!

பர்மாவும், டென்மார்க்கும் ஆதரிக்கவில்லை!

லண்டன், ஆக 17—

பர்மாவும், டென்மார்க்கும், போர்த்துகீசிய இந்தியப் பகுதிகள் பற்றிய போர்ச்சுக்கல் அரசாங்கக் கொள்கையை ஆதரிக்கின்றன என்ற செய்தியை, ரங்கூன், கோபன்ஹேகன், ஆகிய நகரங்களில் உள்ள அரசாங்க அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

இந்த இரு நாடுகளையும் சேர்த்து பதின்மூன்று நாடுகள் போர்ச்சுகீசிய திட்டுகள் இந்தியாவின் இருப்பதை விரும்புவதாக ஆகஸ்ட்; போர்த்துகீசிய அரசாங்க பத்திரிகையான ‘...’ குறிப்பிட்டிருந்தது.

மேற்கு இரியன் தகராறு

ஐ. நா. செல்கிறது

நியூயார்க், ஆக. 17—

இந்தோனேஷியா, நெதர்லாந்து ஆகிய நாடுகளிடையே, மேற்கு புதிய கினியா பற்றி உள்ள தகராறுகளை ஐக்கிய நாடுகள் சபையின் ஒன்பதாவது கூட்டத்தின்போது விசாரிக்க வேண்டுமென ஐ. நா. சபையின் பொதுக் காரியதரிசியிடம் ஒரு தள்ள மனு ஒன்றில் இந்தோனேஷியா வேண்டியுள்ளதாகத் தெரிகிறது

டச்சு கினியா!

இந்தோனேஷியப் பிரதமர், இந்தோனேஷியாவின் 9-ம் ஆண்டு சுதந்திர தின விழாவை யொட்டி, மக்கள் சபையில் பேசுகையில், தனது அரசாங்கம், டச்சு மேற்கு புதிய கினியா, இந்தோனேஷிய நாட்டோடு சேர்க்கப்பட வேண்டும் என்பதற்காகத் தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கும்,” என்று குறிப்பிட்டார்.

ஏழைகளுக்கு உணவு

சென்னை முதலமைச்சர் காமராசர் குடியாத்தம் தொகுதி வெற்றியை முன்னிட்டு 8-8-1954ல், 2000 ஏழை மக்களுக்கு குடியாத்தம் பழைய மார்க்கெட் வியாபாரிகள் சார்பில் உணவளிக்கப்பட்டது.

1953-ல் இந்தியாவில் மொத்தம் 2,46,993 மோட்டார் சைக்கிள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. 1942-ல் உற்பத்தி செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் மொத்த எண்ணிக்கை 1,96,956 ஆகும்.

[illegible]

★★★

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள்

★

21, 22—8—1954-ம் தேதிகளில், காஞ்சிபுரம் கண்ணன் டாக்கீஸ் மைதானத்தில் நடைபெறும்

21—8—54 சனிக்கிழமை :	22—8—54 ஞாயிற்றுக்கிழமை :
சமூக சீர்திருத்த மாநாடு	அரசியல் மாநாடு
தலைவர் : கவிவாணர் என். எஸ். கிருஷ்ணன்	தலைவர் : இரா. சு. தங்கப்பழம்
துவக்குபவர் : எம். ஜி. ராமச்சந்திரன்	துவக்குபவர் : எம். எஸ். மணி

பொதுச்செயலாளர் அண்ணாதுரையும்—எல்லா கழகத் தோழர்களும் கலந்துகொள்வர்

சனி இரவு : ‘சந்திரமோகன்’ ★ ஞாயிறு இரவு : ‘அம்மையப்பன்’

என். எஸ். ராசேந்திரன், டி. வி. நாராயணசாமி, எம். ஆர். சாமிநாதன். எம் என். கிருஷ்ணன் தேட்சணாமூர்த்தி, ஜி. சகுந்தலா முதலியோர் நடிக்கும் நாடகங்கள் நடைபெறும்

கட்டணம் :—வ. குழு ரூ 5; பிரதிநிதி ரூ 3; ஆதரவாளர் ரூ. 2; பார்வையாளர் ரூ. 1. பெண்களுக்கு அணா 8.

★★★

கருத்து விருந்து பெற காஞ்சி வாரீர், தோழர்காள்!—21, 22